நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

## நகர அபிவிருத்தி அதிகார சபை

# கேள்வி அறிவித்தல்

### கண்டி, போகம்பரயில் அமைந்துள்ள நவீனமயப்படுத்தப்பட்ட சிறைச்சாலைக் கட்டிடத்தை தகவல் நிலையம் அல்லது உணவகமாக (Information Center or Restaurant) மாதாந்த வாடகை அடிப்படையில் 05 வருட காலத்திற்கு வழங்குதல்







நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தான பழைய போகம்பர சிறைச்சாலையின் முன்புறம் அமைந்துள்ள நவீனமயப்படுத்தப்பட்ட சிலைச்சாலைக் கட்டிடத்தை தகவல் நிலையம் அல்லது உணவகமாக (Information Center or Restaurant) மாதாந்த வாடகை அடிப்படையில் 05 வருட காலத்திற்கு வழங்குவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

சமர்ப்பிக்கப்படும் விலைகளுக்கிடையில் அதிகூடிய மாதாந்த வாடகை பெறுமதி மற்றும் கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி மதிப்பீட்டு மூலப்பிரமாணங்களை கருத்திக் கொண்டே வெற்றிகரமான கேள்விதாரர் தெரிவு செய்யப்படுவர் என்பதுடன் விண்ணப்பதாரர் தகவல் நிலையம் அல்லது உணவகம் (Information Center or Restaurant) அல்லது அது சார்ந்த பாவனைகள் தொடர்பில் சிறந்த அனுபவத்தைக் கொண்டவராகவிருத்தல் வேண்டும்.

இதில் ஆர்வம் காட்டும் விண்ணப்பதாரர்கள் மேலதிக தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொள்வதற்கு பெறுமதி சேர் வரி (VAT) உள்ளடக்கிய மீளளிக்கப்படாத 2,500.00 ரூபா தொகையைச் செலுத்தி பத்தரமுல்ல, செத்சிறிபாய, 8ஆம் மாடியில் அமைந்துள்ள அந்த அதிகார சபையின் ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவிலிருந்து அல்லது கண்டி, கெப்பெட்டிபொல மாவத்தை, 18ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் மத்திய மாகாண அலுவலகத்திலிருந்து 2021 டிசம்பர் மாதம் 06ஆம் திகதி முதல் 2021 டிசம்பர் மாதம் 24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வருமானக் கேள்விச் சபை (கீழ்மட்டம்),**
**நகர அபிவிருத்தி அதிகாரசபை,**
**6ஆம் மாடி, ''செத்சிறிபாய'',**
**பத்தரமுல்ல.**

நவீனமயப்படுத்தப்பட்ட சிறைச்சாலை கட்டிடத்திற்கு இயைபான தகவல்கள்

| தரைப்பரப்பு அளவு (சதுர அடி) | கால எல்லை | அடிப்படை மாதாந்த வாடகை (ரூபா) | பிணை முறி |
|---|---|---|---|
| தகவல் நிலையம் அல்லது உணவகம் (Information Center or Restaurant) - 2647<br>பொது மலசலகூடம் - 1076 | 05 வருடங்கள் | 135,000.00 + அரச வரிகள் | 200,000.00 |

- தகவல் நிலையமாக அல்லது உணவகமாக பயன்படுத்தும் பாவனையாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட 20 வாகனத் தரிப்பிடங்கள் உள்ளன.
- மேலும் தெரிவு செய்யப்படும் செயற்பாட்டாளரினால் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்படும் அறிவுரைகளின் பிரகாரம் பின்வரும் இடங்களை சிறந்த முறையில் பராமரித்தல் வேண்டும்.
  - அலங்கார நீர் மலர்கள், தடாகம் மற்றும் அதற்கு இயைபான உபகரணங்கள்
  - பொது மலசலகூடம், சேவைக் கட்டிடம் மற்றும் மின் பிறப்பாக்கி இயந்திரம்
  - வெளியில் நிலச்சீராக்க பிரதேசம்

Province: Central
District: Kandy
7°17'28.43"N
80°38'04.72"E

அபிவிருத்திப் பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளல் 2021-12-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு நிறைவுற்ற உடன் பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'', 6ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவில் திறக்கப்படும். இதில் ஆர்வம் காட்டும் விண்ணப்பதாரர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல ''செத்சிறிபாய'', 8ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவிலிருந்து (தொலைபேசி: 011-2875916-20 நீடிப்பு - 2965 - 2968 011-2875921, 011-3611950 மற்றும் 011-2875900, கையடக்கத் தொலைபேசி: 070-6450470) மின்னஞ்சல் முகவரி: realestatedivisionuda@gmail.com இணைய தளம்: www.uda.gov.lk மூலம் அல்லது கண்டி, கெப்பெட்டிபொல மாவத்தை, 18ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் மத்திய மாகாண அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 081-2223898, 081-2223851)